IN THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.
O.S.No. 111 /2013
Deposition of witness for DW2

Name : குருபாலன்(VAO, NAGAL VILLAGE)

Caste : -

Father's Name: பரமசிவம் Calling : -

Village : - Religion : இந்து

Taluk : - Age : 36

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

of the 19 day of September , 2018.

Cross Examination

நான் கடந்த 1 1/2 வருட காலமாக நாகல் கிராமத்தில் கிராமநிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். சர்வே எண் 153 உட்பிரிவு செய்யப்பட்டுவிட்டதா என்றால் செய்யப்பட்டுவிட்டது. அதற்குரிய ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை சம்மந்தப்பட்ட அ பதிவேடு மட்டுமே என்னிடம் உள்ளது. மேற்படி புல எண் எதன் அடிப்படையில் உட்பிரிவு செய்யப்பட்டது என்ற விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 153/1டி யார் பெயரில் உள்ளது என்றால் சி.சந்திரன், கோ.ஈஸ்வரி, மு.நைனாப்பகவுண்டர் என்பவர்கள் பெயரில் உள்ளது. 153/1சி1 யார் பெயரில் உள்ளது என்றால் கோ.ஈஸ்வரி என்பவர் பெயரில் உள்ளது. 153/1சி3 யார் பெயரில் உள்ளது என்றால் கோ.ஈஸ்வரி என்பவர் பெயரில் உள்ளது. 154/3டி யார் பெயரில் உள்ளது என்றால் கோ.ஈஸ்வரி என்பவர் பெயரில் உள்ளது. 154/4 யார் பெயரில் உள்ளது என்றால் கோ.ஈஸ்வரி, கோ.ரெஸ்குரு, காப்பாளர் தாயார் ஈஸ்வரி என்பவர்கள் பெயரில் உள்ளது. இந்த ஆவணங்கள் 1987-ல் யூ.டி.ஆர் -ன் 1989-ல் தயார் செய்யப்பட்டது. 1987-ற்கு முன்பு உள்ள பதிவேடுகளில் அன்றைய தேதிகளில் யார் யார் பெயரில் உள்ளது என்பது தெரியும் என்றால் ஆமாம். நான் எடுத்துவந்துள்ள அடங்கல் மற்றும் சிட்டா பதிவடேுகளும் 2017 - 2018-க்கானது என்றால் சரிதான். பட்டா மாற்றங்கள் குறித்த அனைத்து விவரங்களும் தாலுக்கா அலுவலகத்தில் தான்

பதிவேடுகளில் பதிவு செய்யப்படும் பதிவேடுகளை பராமரிப்பது மட்டுமே என்கடமை. எதற்காக வருவாய்த்துறை ஆவணங்களை மாற்றம் செய்யப்பட்டது அதற்கான உத்தரவுகள் குறித்த விவரம் என்ன என்பது குறித்து எனக்கு தெரியாது. தாலுக்கா அலுவலகத்திலிருந்து சம்மந்தப்பட்ட தாசில்தார் அல்லது ரெக்கார்டுகிளார்க் ஆகியோர்களை கேட்டால் மட்டுமே இந்த விவரங்கள் தெரியும் என்றால் சரிதான். வருவாய்த்துறைஆவணங்களில் பெயர் மாற்றங்கள் செய்வதற்கு முன்னர் சம்மந்தப்பட்டவர்களுக்கு அறிவிப்புகள் அனுப்பப்பட்டதா விசாரணை ஏதேனும் நடத்தப்பட்டதா என்பது குறித்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வருவதற்கு முன் இந்த ஆவணங்கள் குறித்து தாலுக்கா அலுவலகத்தில் ஆவணங்கள் எதையும் பார்க்கவில்லை. நான் சமர்ப்பித்துள்ள ஆவணங்கள் அனைத்தும் முறையாக விசாரணை செய்யப்படாமல் தயார்செய்யப்பட்ட ஆவணங்கள் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.